1979 ஏப்ரல் 21]

கட்டிடங்களைக் கட்டிக்கொடுக்குமாறு வீட்டுவசதி வாரியத்தைக் கேட்டுக்கொண்டது. வீட்டு வசதி வாரியம் இதற்காக நிலம் ஒதுக்கியது. நீதிமன்ற கட்டிடங்களைக் கட்டுவதற்கு முதலில் வீட்டுவசதி வாரியம் அறிவித்த தொகை 1.04 இலட்சம். தற்போது 9.30 லட்சம் ரூபாய் தரவேண்டும் என்று கேட்கிறது. மேலும் இந்தத் தொகையைக் கட்டவில்லையென்றால் அதற்குரிய வட்டியை வசூலிக்க நேரிடும் என்று வீட்டு வசதி வாரியம் தெரிவித்து இருக்கிறது. ஆகவே இதுபற்றி நீதிமன்றம் வீட்டு வசதி வாரியத்தோடு தொடர்பு கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை நகரில் சாலை ஓரங்களில் கடைகள்.

* வினா எண். 758—திரு. சென்னை மு. அரங்கநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை மூர்மார்க்கட் சுற்றியுள்ள சாலைகளிலும், சென்னை தொலைபேசி நிலையத்திற்கும் — பூக்கடைக்கும் இடையிலுள்ள/ சாலையிலும் போடப்பட்டுள்ள கடைகள் அனைத்தும் மாநகராட்சியின் அனுமதியின் பேரில் போடப்பட்டதா?

(ஆ) ஆம் எனில் மாத வாடகை எவ்வளவு? யாரால் வசூலிக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கா. அப்புனு கவுண்டர் : தலைவரவர்களே, நடைபாதைகளில் அதிகமான கடைகளை வைத்துவிடுவதால் பாதசாரிகள் நடைபாதைகளில் நடந்து போவதற்கு பெரும் தொல்லையாக இருக்கிறது. இதை அரசு உணர்ந்து இந்த நடைபாதை கடைகளை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : நடைபாதைகளில் உள்ள கடைகளினால் போக்குவரத்து இடையூறு இருக்கிறது என்பதை அரசு உணர்ந்திருக்கிறது என்றாலும் இதில் வியாபாரம் செய்கின்றவர்களுடைய நிலைமையில் மனிதாபிமான உணர்வோடு இரக்கம் காட்ட வேண்டும் என்ற நிலைமையில், இந்த நடைபாதை கடை வியாபாரிகளே ஒரு முறையோடு கடைகளை வைத்துக்கொள்ள வேண்டும் என்றும், அதைப்பற்றி ஆலோசித்து முறையாக அமைத்துக் கொடுப்பதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டது. மாநகர ஆட்சி தனி அதிகாரி, ஆணையாளர், பெருநகர் வளர்ச்சி மன்ற அதிகாரி, போலீஸ்

கமிஷனர், தலைமைப்பொறியாளர், ஊரக வளர்ச்சி நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை இயக்குநர் நகாப்புற உச்சவரம்பு, இயக்குநர் புள்ளிவிவரம், இவர்களைக் கொண்ட ஒரு குழு அரசுக்கு ஒரு அறிக்கையைத் தந்திருக்கிறது, அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ராஜ்குமார் விஜயரகுநாத தொண்டமான்: தலைவர் அவர்களே, மூர்மார்க்கட் பக்கத்தில் சென்ட்ரல் ஸ்டேஷன் இருக்கிறது. இந்த சென்ட்ரல் ஸ்டேஷனோடு மூர்மார்க்கட் பகுதியையும், இணைக்கப் போவதாக ஒரு ப்ரபோசல் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அப்படி இணைக்கப்படும்போது இப்படிப்பட்ட கடைகளும் அத்துடன் சேர்த்து இணைக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அதுபற்றிய முழு விவரம் இல்லை.

[முற்பகல் 9.20]

திரு, ரா, கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, இந்த மூர் மாாக்கெட்டிலிருந்து பாரிஸ் காார்னர் வரை பல கடைகள் அந்தப் பகுதிகளிலே வைக்கப்பட்டிருக்கின்றது, மனிதாபிமானத்தோடு பார்ப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் அங்கே அண்ணா பெயரிலேயே போர்டு போட்டு, வெளிப்படையாகவே வைத்திருக்கிறார்கள். அது மாத்திரமல்ல. அந்தப் பகுதியிலே உள்ள ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அதை வசூல் செய்வதாக அறிகிறேன். எனக்குத் தகவல் வந்திருக்கிறது. ஆகவே, அந்த அடிப்படையில் இல்லாமல் இருக்க ஏற்பாடு செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, தவறான தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிறார்கள். மாநகராட்சி அந்த ஆக்கிரமிப்புக் கடைகளுக்குக் கட்டணம் வசூலித்துக் கொண்டு வருகிறது.

திரு. கே. சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, சென்னை நகரில் பெருவாரியான சிறு வியபாரிகள் இன்றையதினம் வியபாரம் செய்வதற்கு இடமில்லாத காரணத்தால் சாலை ஓரங்களில் கடைகள் வைக்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. இதைத் தவிர்க்கின்ற நிலையில் சென்னையில், ஒரு பெரிய இடத்தில் சிறுகடை வியாபாரிகளுக்காக பெரிய அளவில் வசதி செய்து தருவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

1979 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்ததுபோல், அந்தக் குழுவின் அறிக்கை வந்திருக்கிறது. அதைப் பரிசீலித்து இதுகுறித்து முடிவு செய்யலாம்.

தனியார் பள்ளிகளிலிருந்து சென்னை மாநகராட்சிப் பள்ளிகளுக்கு எடுக்கப்பட்ட ஆசிரியர்கள்.

* வினா எண் 759—திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தனியார் தொடக்கப் பள்ளிகளிலிருந்து சென்னை மாநகராட்சியில் அமர்த்தப்பட்ட தலைமை ஆசிரியர்கள் மற்றும் உதவி ஆசிரியர்களுக்கான கல்வி இலாகாவின் ஆணை எண் 56461/ந. 1/67—18, நாள் 6-1-70 சென்னை மாநகராட்சி நடைமுறைப்படுத்தப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அவ்வாறு அமர்த்தப்பட்ட தலைமை ஆசிரியர்கள் உதவி ஆசிரியர்கள் முறையே எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:

(அ) & (ஆ) தனியார் பள்ளிகளிலிருந்து 102 ஆசிரியர்கள் மாநகராட்சிப் பள்ளிகளில் உதவி ஆசிரியர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டனர். இவர்களுக்கு இன்னும் 6-1-70 நாளிட்ட 56461/இ1/67 கல்வித்துறை அரசாணையின்படி ஊதியம் இன்னமும் திருத்தி அமைக்கப்படவில்லை. பரிசீலனையில் உள்ளது.

திருவல்லிபுத்தூர் நகராட்சி குடிநீர் வழங்கு திட்டம்.

* வினா எண் 760—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவில்லிபுத்தூர் நகராட்சியின் குடிநீர் திட்டத்திற்கான ஆய்வுத் தொகை ரூ. 20,800/— காட்டியது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் என்றால், அது பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

TRUTH ALONE TRIUMPHS